# BSNL ஊழியர் சங்கம்
## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:103** **தேதி:-01.06.2016**

## NO VRS-BSNL சேவைகளின் முன்னேற்றம்- BSNL CMD அறிவிப்பு மற்றும் சில மத்திய சங்க செய்திகள்

அன்பார்ந்த தோழர்களே,

30.5.2016 அன்று, BSNL நிறுவனத்தின் அனைத்து ஊழியர்-அதிகாரிகள் சங்கங்கள் கூட்டமைப்பின் மையக்குழு (CORE COMMITTEE OF FORUM) சார்பாக, BSNL ஊழியர் சங்கத்தின் அகில இந்திய பொதுச் செயலாளர் தோழர். P. அபிமன்யூ, SNEA அமைப்பின் அகில இந்திய பொதுச் செயலாளர் தோழர். K. செபாஸ்டின், AIBSNLEA அமைப்பின் அகில இந்திய பொதுச் செயலாளர் தோழர். பிரஹலாத் ராய் ஆகியோர் BSNL CMD அவர்களைச் சந்தித்தனர்.

BSNL நிறுவனத்தில் VRS திட்டம் அமுல்படுத்த முற்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது என்று கூட்டமைப்பின் தலைவர்கள் CMD- யிடம் உறுதிபடத் தெரிவித்தனர். MTNL நிறுவனத்தில் பல முறை VRS திட்டம் அமுல்படுத்தப் பட்ட பிறகும் அந்நிறுவனத்தில் நஷ்டம்தான் ஏற்பட்டு வருகிறது என்றும், நிர்வாகம் ஆலோசிக்கும் எந்த வடிவத்திலான VRS திட்டத்தையும் கைவிட வேண்டும் என்றும் கூட்டமைப்பின் சார்பில், CMD- யிடம் தெரிவிக்கப் பட்டது.

BSNL நிறுவனத்தில் VRS திட்டத்தை அமுல்படுத்த ரூ. 18,000 கோடி தேவைப்படுவதாலும், BSNL நிறுவனத்தில் உள்ள ஊழியர்-அதிகாரிகள் சங்கங்கள் மற்றும் அமைப்புகள் கடுமையாக எதிர்ப்பதாலும், VRS திட்டத்தை அமுல்படுத்த வாய்ப்பில்லை என்று இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் தான் தெரிவித்ததாகவும், அதை அப்பத்திரிகை பிரசுரிக்கவில்லை என்றும் CMD அவர்கள் தெரிவித்துள்ளார்.

- 2015-16- ஆம் ஆண்டில் BSNL நிறுவனத்தின் செயல்பாட்டு இலாபம் ( Operational Profit ) ஏறத்தாழ 2000 கோடி ரூபாயாகவும், வருமானம் ஏறத்தாழ 30,000 கோடி ரூபாயாகவும் இருக்கும் என எதிர்பார்க்கப் படுவதாக CMD அவர்கள் தெரிவித்துள்ளார். 2014-15- ஆம் ஆண்டில் செயல்பாட்டு இலாபம் 672 கோடி ரூபாயாக இருந்தது என்பது குறிப்பிடத் தக்கது.

- BSNL நிறுவனம் வருமானவரி இலாகாவுக்கு கூடுதலாகச் செலுத்தியிருந்த வரிப்பணம் திருப்பித் தரப்பட வேண்டும் என்ற தாவா தீர்க்கப் பட்டு, தற்போது 6000 கோடி ரூபாய் BSNL நிறுவனத்திற்கு திருப்பி அளிக்கப் பட்டுள்ளது. மேலும் 1000 கோடி ரூபாய் திரும்பப் பெற வாய்ப்புள்ளதாக CMD தெரிவித்துள்ளார்.

**மொபைல் சேவை விரிவாக்கம்:-** மொபைல் சேவை விரிவாக்கம் குறித்து, கூட்டமைப்பின் தலைவர்கள் CMD அவர்களுடன் விவாதித்தனர். பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளதாக CMD தெரிவித்துள்ளார்.

7-ஆம் கட்ட மொபைல் கட்டமைப்பு விரிவாக்கத்திற்காக 21,000 டவர்கள் நிர்மாணிக்கப் பட்டுள்ளன. அதே டெண்டரின் கீழ், மேலும் 100% கருவிகள் வாங்கவும் நிறுவனம் நடவடிக்கை எடுத்து வருகிறது. வடக்கு, தெற்கு, கிழக்கு மண்டலங்களில் இவை நிர்மாணிக்கப் படவுள்ளன.

இவை காலாவதியாகிப்போன 2G கருவிகளை மாற்றவும், கூடுதலான 3G கருவிகளுக்காகாவும் பயன்படுத்தப்படும் என்றும் தெரிவித்தார்.

8-ஆம் கட்ட விரிவாக்கத்தின் கீழ், 3 கோடியே 10 லட்சம் மொபைல் கருவிகள் வாங்க நிர்வாகம் முடிவு செய்துள்ளது. 2 ஜி, 3 ஜி, 4 ஜி தொழில்நுட்பத்துடன் கூடிய 27,000 புதிய டவர்கள், 5000 கோடி ரூபாய் மூலதனத்தில், இரண்டு ஆண்டுகளுக்குள் நிர்மாணிக்கப் படும். தற்போது 1,20,000 டவர்கள் உள்ளன.

இத்திட்டங்களின் மூலம் BSNL நிறுவனத்தின் நெட்வொர்க் கவரேஜ் அதிகரிக்கப் படும்; சேவையின் தரம் உயரும்.

**<u>புதிய திட்டம் - BSNL மொபைல் அழைப்புகள் வீடுகளுக்குத் திருப்புதல் இலவசம்</u>:-** BSNL மொபைல் இணைப்புகளுக்கு வரும் அழைப்புகளை, தரைவழி இணைப்புகளுக்கு திருப்பி விடுவதற்கு தற்போது ஒரு உள்ளூர் அழைப்புக்கான கட்டணம் வசூலிக்கப் படுகிறது. 30.5.2016 முதல் இதனை எந்தவிதமான கட்டணமுமில்லாமல் முற்றிலும் இலவசமாக்கும் புதிய திட்டம் BSNL நிறுவனத்தால் அறிவிக்கப் பட்டுள்ளது. இதனால் கட்டிடங்களுக்குள் BSNL மொபைல் நெட்வர்க் கிடைக்கவில்லை என்கின்ற வாடிக்கையாளர்களின் பிரச்சனைக்கும் தீர்வு கிடைக்கும்.

**EB பிரிவின் சாதனை:-** STATE BANK OF INDIA வங்கி, LEASED LINES வேகம் 64-KBPS- யிலிருந்து 2 MB - ஆக அதிகரிக்கப் பட்டால்தான் BSNL நிறுவனத்திடம் இணைப்புகளைப் தொடர முடியும் என தெரிவித்தது. இது சாத்தியப்படாவிட்டால் அவர்கள் தங்களின் இணைய தள சேவையை ஏர்டெல் நிறுவனத்தில் இருந்து பெறப்போவதாகவும் தெரிவித்தது. இந்த சவாலை ஏற்றுக் கொண்ட BSNL நிறுவனத்தின் ENTERPRISE BUSINESS பிரிவு, ஒரே மாதத்தில், நாடு முழுவதும் உள்ள வங்கியின் 12,000 கிளைகளின் LEASED LINE- களின் வேகத்தை 2 MBPS - ஆக அதிகரித்துள்ளது. மேலும் உள்ள 8,000 கிளைகளில் மேலும் ஒரு மாதத்திற்குள் 2 MBPS-ஆக அதிகரிக்க நடவடிக்கை எடுத்து வருகிறது. EB பிரிவின் இந்த சாதனையைப் பாராட்டி மையக்குழு தலைவர்கள், திரு. என்.கே. மேத்தா (DIR-EB) அவர்களை நேரில் சந்தித்து, வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்,

- நாடு முழுவதும் உள்ள நீதிமன்றங்கள் அனைத்தையும் பைபர் மூலம் இணைக்கும் உச்ச நீதிமன்றத்தின் திட்டமும் BSNL நிறுவனத்திற்கு வழங்கப் பட்டுள்ளது என்ற மகிழ்வான செய்தியினையும் DIR-EB தெரிவித்தார். இத்திட்டத்தின் மதிப்பு 300 கோடி ரூபாயாகும்.

**<u>நெஞ்சார்ந்த பாராட்டுக்கள்:-</u>** 2015-16- ஆம் ஆண்டில் கர்நாடக மாநிலம் சுமார் 40 கோடி ரூபாய் லாபம் ஈட்டியுள்ளது. கர்நாடகா மிகப் பெரியதும், வருமானத்தை அதிகரிக்க வாய்ப்புள்ளதும் ஆன மாநிலம் ஆகும். கர்நாடக மாநிலத்தின் இந்த சாதனைக்குக் காரணமான அனைத்து ஊழியர்களுக்கும், அதிகாரிகளுக்கும் BSNL ஊழியர் சங்கம் நெஞ்சார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறது. லாபமீட்டும் பிற மாநிலங்கள் - அந்தமான் நிகோபார், ஜம்மு காஷ்மீர், ஒரிசா மற்றும் கேரளா ஆகியன.

**<u>JAO - இலாகா தேர்வு:-</u>** JAO - இலாகா தேர்வு குறித்து பின்வரும் கோரிக்கைகளை BSNL ஊழியர் சங்கம் நிர்வாகத்திடம் வலியுறுத்தியது.

- வயது வரம்பு 53 -இலிருந்து 55 ஆக உயர்த்தப் பட வேண்டும்.
- 9020 ஊதிய விகிதத்தில் 5 ஆண்டு சேவை என்ற நிபந்தனை, அனைத்து ஊழியருக்கும் 5 ஆண்டு சேவை என மாற்றப் பட வேண்டும்.

- வயது வரம்பை தீர்மானிக்கும் தேதி, ஜனவரி 1 என்பதற்குப் பதிலாக, ஜூலை 1 என திருத்தம் செய்யப் பட வேண்டும்.

இவற்றிற்கான திருத்தங்களை JAO நியமன விதிகளில் ஏற்படுத்துவதற்கு 6 மாத காலம் ஆகும் என்றும், ஜூலையில் தேர்வு நடைபெற உள்ளதால் அதற்குள் திருத்தங்கள் கொண்டு வர இயலாது என்றும், அடுத்த தேர்விற்குள் இத்தகைய திருத்தங்கள் செய்யப் படும் என்றும் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

**அதிகாரிகளின் சங்கங்களுக்கு உறுப்பினர் சரிபார்ப்பு:-** ஊழியர் சங்கங்களுக்கு அங்கீகாரம் வழங்குவதற்கு 7 உறுப்பினர் சரிபார்ப்பு தேர்தல்கள் முடிவடைந்துள்ள சூழ்நிலையில் அதிகாரிகளின் சங்கங்களுக்கான உறுப்பினர் சரிபார்ப்பு தேர்தல் 27.09.2016 அன்று நடைபெறுவதாக நிர்வாகம் அறிவிப்பு வெளியிட்டுள்ளது. இதற்கு முன்னதாக நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்த தேர்தல்கள் பல்வேறு காரணங்களால் தள்ளி வைக்கப்பட்டன. தற்போது 27.09.2016 அன்று தேர்தல்கள் நடைபெற்று 29.09.2016 அன்று முடிவுகள் அறிவிக்கப்படுமென அறிவிப்பு வெளியாகி உள்ளது.

**JTO LICE தேர்வு தொடர்பான பாட்னா CAT உத்தரவை எதிர்த்து மேல் முறையீடு:-** 2014ஆம் ஆண்டிற்கான JTO LICE தேர்வுகள் JTO RR 2014ன் கீழ் நடத்தக்கூடாது என பாட்னாவில் உள்ள மத்திய தீர்ப்பாய அமர்வு 25.05.2016 அன்று உத்தரவு பிறப்பித்துள்ளது. நாட்டில் உள்ள பல மத்திய தீர்ப்பாயங்கள் மாறுபட்ட உத்தரவுகளை பிறப்பித்த அடிப்படையிலும், பாட்னா தீர்ப்பாயத்தில் வழக்கு தொடுத்த நபரே அந்த வழக்கை திரும்ப பெற்றதின் அடிப்படையிலும் இந்த உத்தரவினை எதிர்த்து மேல் முறையீடு செய்ய வேண்டும் என BSNL ஊழியர் சங்கம் DIRECTOR (HR) அவர்களுக்கு கடிதம் எழுதியுள்ளது. 22.05.2016 அன்று நடைபெற்றுள்ள JTO LICE தேர்வின் முடிவுகளை உடனடியாக வெளியிட்டு தேர்ச்சி பெற்றவர்களை உடனடியாக பயிற்சிக்கு அனுப்ப வேண்டும் என்றும் நமது மத்திய சங்கம் கேட்டுக் கொண்டுள்ளது. மேலும், 28.07.2016 அன்று நடைபெற உள்ள 2014-15ஆம் ஆண்டின் காலிப்பணியிடங்களுக்கான தேர்வுகள் நடைபெறுவதை உறுதி செய்ய வேண்டும் என்றும் நமது மத்திய சங்கம் வலியுறுத்தி உள்ளது.

**வழங்கப்பட்ட EXCESS PAYMENTஐ பிடித்தம் செய்வதை நிறுத்துக:-** கடந்த காலங்களில் ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட அதிகப்படியான ஊதியத்தை ஒரு சில சூழ்நிலைகளில் திரும்ப பிடித்தம் செய்வது கூடாது என உச்ச நீதிமன்றத்தின் உத்தரவின் அடிப்படையில் DOP&T ஒரு கடிதம் வெளியிட்டுள்ளது. அதனை DOT, ENDORSEMENT செய்யாததால் BSNL நிறுவனமும் அந்த உத்தரவை அமுல்படுத்தவில்லை. எனவே DOP&Tயின் கடிதத்தை DOT ENDORSE செய்ய வேண்டும் என வலியுறுத்தி DDG(Estt),DOT அவர்களுக்கு நமது மத்திய சங்கம் ஒரு கடிதம் எழுதியுள்ளது.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுடன்,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**